# பிணைக்கைதி நாவலில் சரளா - உள் மடிப்பு கதையாக்கத்தில் புரியப்படாத விதிகள்

**ஆ.ஏஞ்சல் ரோஸ்லின்,**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல் உயராய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்,*
*நீலகிரி மாவட்டம்.*

**ஆய்வுச் சுருக்கம்**

தனிப்பட்ட மனித வாழ்க்கை எண்ணற்ற பிரச்சினைப்பாடுகளால் கட்டுண்டு கிடக்கின்றது. இந்திய நாட்டில் தனிமனிதன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் சாதி என்பதும் அடங்குகின்றது. இன்றைய காலகட்டத்தில் நகரத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு சாதி என்பது ஒரு பிரச்சினையாகத் தெரியாவிட்டாலும் தனிப்பட்ட அவர்களது வாழ்க்கை வெளியில் காதல் மற்றும் திருமணத்தின்போது அது எவ்வளவு வெளிப்படையாகத் தோன்றி தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது, கருத்தியலாக சாதி என்பது எவ்வளவு பிணைப்புடையாதாக இன்னும் இருக்கிறது என்பதை புலப்படுதும் வகையில் பிணைக்கைதி என்னும் நாவல் வழியாக ஒரு வாசிப்பு இங்கு அமைகிறது.

**ஆய்வு அணுகுமுறைகள்**

இவ்வாய்வுக் கட்டுரையில் பாத்திரத்தையும் சில கருத்தியல்களையும் விளக்கும் முகமாக **விளக்கமுறைத் திறனாய்வும்**, தனிப்பட்ட பாத்திரத்தை முன் வைப்பதால் **பகுப்புமுறைத் திறனாய்வும்** மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கலைச்சொற்கள்**

மதம், காதல், பாலியல், சுதந்திரம், மரபு.

**முன்னுரை**

அண்மைக்காலத்து நாவல்களில் மனிதனின் சுதந்திரம் மற்றும் அகவயம் குறித்தான பல்வேறு விழுமியங்கள் பேசப்படும் களமாகியுள்ளன. இன்றைய சூழ்நிலையில் தனிமனிதரின் வாழ்க்கைநிலை கேள்விக்குறியாகியுள்ளது மரபார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்னும்

தீர்வு காணமுடியாத நிலையில் புதிய பிரச்சினைகளும் மனிதரை ஆட்கொள்ளும்படியாக உள்ளன. இதற்கு, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள '**பிணைக்கைதி**' என்னும் இந்தி நாவலும் சாட்சியாவதை இக்கட்டுரைப் புலப்படுத்தும் வண்ணம் அமைகிறது.

**பிணைக்கைதி - கதைச்சுருக்கம்**

ரகுநாத்தின் மனைவி ஷீலா, மகள் சரளா, மகன்கள் சஞ்சய் - ராஜூ என்ற தனஞ்சயன். சரளாவுக்கு முரட்டுத்தனமான முறைதவறிய காதல் இருந்தது, ஆனால் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருந்தாள். இதனால் ஷீலா தனது இறுதிக் காலத்தை கணவனையும் விடுத்து சரளாவோடு தங்கிவிட்டாள். சஞ்சய் காதலித்துத் திருமணம் செய்துகொண்டான். அமெரிக்கா சென்று அங்கேயே வேலைவாய்ப்புப் பெற்று மனைவியான ஸோனலை மீண்டும் இந்தியா அனுப்பிவைத்தான். ரகுநாத்தின் இறுதிக்காலம் மருமகளைப் பார்த்துக் கொள்வதாக அங்கேயே கழிந்தது. ராஜூ ஒரு பெண்ணை வைத்துக்கொண்டிருக்கிறான். அது திருமணமானதா இல்லையா என்பது யாருக்கும் தெரியவில்லை.

ரகுநாத் கல்லூரிப் பேராசிரியர் எதையும் எதிர்க்கத் துணியாதவர். சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுபவர். தன்னுடைய மூத்தமகனாலேயே அந்த வேலைக்கும் ஆபத்து வந்துவிடுகிறது. அவருடைய வேலைபோய்விட்டது. பென்ஷன் மட்டும் வருகிறது. இவர் பார்த்த பெண்ணை சஞ்சய் கட்டியிருந்தால் இந்த வேதனையிலிருந்து அவர் தப்பித்து இருப்பார். இப்படி தன்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவராலும் அவர் ஏறியவாழ்க்கைப் படியிலிருந்து ஏறத்தாழ இறங்கி இறங்கி, தரைக்கே வந்துவிட்டார். ஆனால் நவீனகாலத்தில் பிள்ளைகளின் வாழ்க்கைநோக்கை, அதன் ஆடம்பரத்தை, எதிர்பார்ப்பை அதில் இருந்த நியாத்தை அவரால் ஏற்கவும் முடியவில்லை. அதற்குள் அவரால் நுழையவும் முடியவில்லை. தன் நிலத்தைக்கூட காப்பாற்ற அவரால் முடியவில்லை.

ரகுநாத் தன்னுடைய பாட்டன் பூட்டன் நிலத்தை வைத்திருந்தார். பிள்ளைகள் அதனை கவனிக்காமல் வெளியூர் சென்றுவிட்டனர். நிலத்தை அவரது அண்ணன் மகன்கள் வளைத்துப் போட்டுக்கொள்கின்றார்கள் ரகுநாத் தான் நினைத்தது எதுவும் நடைபெறமல் அனாதையாக ஸோனல் வீட்டில் தஞ்சமடைகிறார். அவரது எண்ணங்கள் இன்னும் மடியவில்லை. ஸோனலை பெற்றபிள்ளையாகவே நினைக்கிறா.ர் அதனால் இப்போது அவளுடன் வாழ்ந்து வருபவனை அவர் அங்கீகரிக்கிறார். சஞ்சய் தனது முதல் கல்யாணத்தையும் சொல்லவில்லை. இப்போது அமெரிக்காவில் இன்னொரு திருமணமும் அவன் செய்துகொண்டதாகக் கேள்வி. தந்தை என்ற இடத்தில் எந்த மதிப்பும் இல்லாமல் அவர் இறப்பை நோக்கித் தனது வாழ்நாளைக் கடத்துகிறார்.

**சரளா**

ரகுநாத்தின் முதல் குழந்தை சரளா. ஒரு கதாநாயகி மனோபாவத்துடன் வளர்ந்து தனது மனதிற்குப் பிடித்தசெயல்களைச் செய்து அதன் குற்றவுணர்வு இல்லாமல் வாழ்ந்து தனது பெற்றோர்களையும் துன்பநிலைக்கு உள்ளக்குகிறாள். அவளது விருப்பங்கள் மற்றும் தேர்வுகள்

என்பது இந்த வாழ்வை அனுபவித்துவிடவேண்டும் என்றுமட்டும் இருக்க அதனாலான இலாப நட்டங்களைப் பற்றி அவளுக்கு எந்தவிதமான குற்றவுணர்வும் இல்லை. சரளா தன்னிலிருந்து இந்த உலகத்தைப் பார்த்தாள்

**கதாநாயகி பாவமும் காதலும்**

சரளாவிற்கு எதிலும் ஒட்டாத விசித்திரமனம் இருந்தது. எதையோ பறிகொடுத்த உணர்வும் காரணமில்லாமல் சிரிக்கும் பழக்கமும் அவளிடம் இருந்தன. புத்தகம், நோட்டை எங்காவது வைத்துவிட்டு தேடுவது, பாட்டை முணுமுணுப்பது, காலணியை மாற்றிப்போட்டுக் கொள்வது, கையிலே கவிதைப் புத்தகம் வைத்துக்கொள்வது டவுனுக்குப்போய் ஒரு படத்தையும் விடாமல் பார்ப்பது என்பதெல்லாம் அவளுக்குள் கதாநாயகி பாவத்தை மட்டுமல்ல காதலையும் வளர்த்தது.

கவிதைப் பாடத்தை நடத்தும் கௌசிக் ஆசிரியர் எப்படிஅவள் மனதிற்குள் புகுந்தார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. மூன்று இளைஞர்களின் தந்தையான அவரினைக் காதலிக்கும் சரளாஅதை நியாயப்படுத்தியும் கொள்கிறாள். **"அருமையான சென்ஸ் ஆவ் ஹ்யூமர் வாய்நதவர் அவரைக் காதலிப்பதில் அபாயம் ஒன்றும் கிடையாது. யாருக்கும் சந்தேகமும் கிடையாது... பையன்களோ, பெண்களோ வம்பு பேசுவார்களோ என்கிற பயமும் கிடையாது!"** [1] என்பதில் இந்த சமூகப் பார்வைக்குள் இருந்துத் தப்பிக்கும் வழி அறிந்தவளாக இருக்கிறாள்.

இருவருமே உடலிச்சை என்பதில் விருப்பமுடைவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாகத் திருமணமான கௌசிக் சாரிடம் நிறைய எதிர்பார்ப்பவளாக இருக்கிறாள் சரளா. இதற்காக அவர்கள் வெளியே சுற்றி சாரநாத் என்னும் இடத்தைத் தேர்வு செய்கிறார்கள். ஆனால் அந்தப் பூந்தோட்டத்தில் உள்ள காவல்காரனிடம் சிக்கிக்கொள்கிறார்கள் முதன்முறையாக கௌசிக்கின் பயத்தைப் பார்த்து சரளா ஒருபக்கம் மிரண்டு இறுதியில் காவல்காரனை இவள் எச்சரிக்கும் போது சரளா எதையும் துணிந்து செய்வாள் என்னும் இடத்தைக் காட்டுகிறார் நாவலாசிரியர்,

**"உனக்குத்தான் அவர் பெரிசு! எனக்கு நண்பர் காதலர் நாங்க காதலிச்சோம், முத்தமிட்டோம். அது நாங்க இஷ்டப்பட்டு செஞ்சது. யாரும் யாரையும் பலாத்காரம் பண்ணலே. எதுக்குபோலீஸ் ஸ்டேஷன் வரணும்... யாரும் போலீஸ் ஸ்டேஷன் போக முடியாது. நீயும் சரி, நாங்களும் சரி! எஸ்.பி, கலெக்டர் ஐ.ஜி யாரைக் கூப்பிடணும்னாலும் இங்கேகூப்பிடு, உன் மனசிலே என்ன நெனச்சுக்கிட்டு இருக்கே:.... நாங்க காதலிச்சு கட்டிப் புரண்டதைப் பாத்தீங்களா? இது நாற்சந்தியா, கடைத் தெருவா? இங்கே என்ன ரேப்பா நடந்தது? பணத்துக்காக மிரட்டிப் பார்க்கறியா? நீ என்னடா எங்களை ஸ்டேஷனுக்கு அழைச்சுட்டு போரது. நாங்க உன்னை இழுத்துக்கிட்டு போவோம்"** [2]

சௌக்கண்டி ஸ்தூபத்தில் நடக்கும் இவ்விதமான காரியத்தை காவலாளி பார்த்து அதட்டும் நிலையில் ஆசிரியரின் கோழைத்தனமான நடவடிக்கை சரளாவுக்குப் பிடிக்கவில்லை. அதை ஒரு கனவென மறக்க நினைக்கிறாள். மறுபடியும் மிர்ஜாபுர் பாரதியை காதலிக்கிறாள்.

ஆனால் அதற்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவிப்பதால் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறாள். இறுதிவரை சரளா திருமணம் செய்து கொண்டதற்கான முகாந்திரம் நாவலில் இல்லை என்பதன் மூலம் தனது தாயுடன் அவள் கழிக்கும் தனிமை நமக்குப் புலனாகின்றது. பெற்றோர் சம்மதமில்லாமல் தனது திருமணம் இல்லை என்ற அவளது பிடிவாதமும், தாழ்ந்த சாதிப்பையனை கட்டுவதானால் தங்கள் சம்மதமில்லை என்ற பெற்றோரின் பிடிவாதமும் இங்கு திருமணத்திற்கு சிக்கலாகின்றன.

அவளது இரண்டாவது காதல் ஒருதலைக்காதல் போலவே இருக்கிறது. முதற்காதலை வீட்டில் சொல்லாத சரளா, தனது தந்தை தனது திருமணத்திலேயே குறியாக இருப்பதால், திருமணம் செய்து வைப்பதைத் தனது கடமையாக நினைப்பதால் அக்காதலைச் சொல்லிவிடுகிறாள் .அவளுடைய காதலன் சக்கிலிய சாதியைச் சார்ந்தவன் என்பதையும் சொல்லிவிடுகிறாள். அதனால் ரகுநாத் மிகுந்த துயரத்திற்கு ஆளாகிறார். ஆனால் சரளா அது பற்றிய எந்த கவலையும் இல்லாமல் இருக்கிறாள். சாதியைஅவள் ஒரு பொருட்டாகப் பார்க்காமலும் மதிக்காதவளாகவும் இருக்கிறாள். நிகழ்காலத்தை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதுடன் எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்பவளாகவும் இருக்கிறாள்.

சாதியைச் சரளா ஒரு பொருட்டாகப் பார்க்கவில்லை என்றாலும், இந்தச் சமூகமும் தன் பெற்றோரும் அதை மிக கவனமாக பொருட்படுத்தி அதை ஒரு உயிருள்ள பொருளாகப் பாவிக்கிறார்கள் என்பதையும் கவனப்படுத்திக் கொள்ளத் தவறுகிறாள். பண்பாட்டுப் போராட்டாகமாக மனிதனின் உடலிலும் உள்ளத்திலும் சாதி மிக ஆழமாகப் பதிந்துள்ளது என்பதைக் கணிக்கத் தவறிவிடுகிறார்கள். இத்தகைய பண்பாட்டுப் போராட்டத்தைப் பின்வருமாறும் நாம் கவனப்படுத்திக் கொள்ளலாம்.

"**சாதி, பிறப்புவழி ஒருவருக்கு அமைகிறது. பிறப்பின் அடிப்படையில் மனிதரிடையே அறிவு, திறமை, மதிப்பு, பொருள் இவற்றின் ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்தி வருகிறது. மேல் - தாழ்த்தப்பட்ட சாதி வேறுபாடு பிறப்பால் இயற்கையாக அமைந்த ஒன்று என மக்கள் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இவ்வாறு சாதியமைப்பு, பண்பாட்டுக்குரியதாகப் பட்டதால் அதற்கு எதிரான போராட்ட விதைகள் கடுமையான கட்டுப்பாட்டு விதிகளால் செயலிழக்கப்பட்டு வந்துள்ளன.** எனவேதான் முதலாளி தொழிலாளி வர்க்கங்கள் ஏற்றத்தாழ்வுக்கிடையே உடன்மோதுவதுபோல், மேல் சாதியினரும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் மோதுவதில்லை. இவ்விஷயத்தில் மனிதரிடையே இனம் மற்றும் அறிவு அடிப்படையில் ஏற்றத்தாழ்வு இல்லை என்ற மானுடவியலார் கண்டுபிடிப்பைவிட மதக்கோட்பாட்டின் பாதிப்பு அதிகமாக மக்களைப் பிணைத்துக் கொண்டுள்ளன. மொத்தத்தில் சாதி வேறுபாட்டை தெய்வத்தால் உண்டாக்கப்பட்டதாக இந்து மதக்கொள்கைகள் மக்களை நம்பச் செய்து வந்துள்ளன" [3] என்பது ஆய்வு வழிச் செய்தியாக இருப்பதை கவனமாக உள்வாங்க வேண்டியிருக்கிறது.

**வாழ்வும் தனிமையும்**

பஹாட்பூரில் முதன்முதலாக பட்டப்படிப்பு மட்டுமல்ல பி.எட் படித்தவளாக, அரசாங்க

வேலைவாய்ப்பும் பெற்று ஆசிரியையான முதல் பெண் சரளா. ஆனால் சரளாவின் வாழ்க்கைத் தனிமையில்தான் கழிந்தது. இறுதிவரை அவள் தனது காதலனை மணந்தாளா என்பது நாவலில் சொல்லப்படவில்லை. ஆனால் அவளது தாயாரான ஷீலா அவளுக்கு ஒத்தாசையாக அவளிடம் சேர்கிறாள். இறுதிவரை அவளுடனே இருக்கிறாள். இப்படி உடலுக்கும், மனதுக்கும், சுதந்திரத்திற்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சரளா அதற்கு நேர்மாறாக ஒற்றையாகத் தனிமையில் வாழ்வது நம்மை சிந்திக்க வைக்கிறது. அவளாகத் தேர்ந்தெடுத்த தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை அவள் தனித்தே தொடர்கிறாள். தனது தந்தையை இறுதிவரை தன்னுடன் அழைத்துக் கொள்ளாத பெண்ணாகவும் இருக்கிறாள். வாழ்க்கைப் பயணம் எங்கெல்லாமோ நம்மை யாரிடமெல்லாமோ எதிரியாக்கி விடுகிறது என்பதற்கு இங்குமகளும், தந்தையும் சாட்சியாகிறார்கள் எனலாம்.

**முடிவுரை**

பிணைக்கைதி நாவலில் சரளா என்னும் பாத்திரம் பெண்ணியம் பேசும் பாத்திரமல்ல. ஆனால் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை வெளியில் தான் போகும் பயணத்தின் வழி அவள் தனக்கான சுதந்திரத்தை அடைய நினைக்கிறாள். பண்பாடு, சாதி என்னும் பெயரால் பழைமைகள் மற்றும் பல்வேறு கருத்தியல்களை அவள் முன்கூட்டிக் கணிக்கத் தவறிவிடுகிறாள். காரணம் சாதியை, மதத்தை அவள் ஒரு பொருட்டாக நினைக்காத வெறும் படித்த பெண்ணாக இருக்கிறாள். நடைமுறையில் அவை சிக்கலானவை என்பதை அறிந்து தன்னைத்தான் அவள் தனிமைப்படுத்திக் கொள்கிறாள். காதல், பாலுணர்ச்சி என்பதற்கெல்லாம் அவள் இப்போது அர்த்தங்களை கூட்டிக்கொள்ளாத இடத்திற்கு வந்து சேர்கிறாள். அதுவும் ஒரு சுதந்திரம் என்பது அவள் சொல்லாத அர்த்தமாகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] காசிநாத் சிங், பிணைக்கைதி, ப.40, ஞானம்.,மு. (மொ.ப.ஆ), சாகித்ய அகாதெமி, புதுதில்லி - 01, மு.ப.2017.

[2] காசிநாதசிங், மு.நூ, ப.34.

**ஆய்வேடு**

**ந.சந்திரசேகரன், சமகாலத் தமிழ் நாவல்களில் பண்பாட்டுப் போராட்டம்,** முனைவர்பட்ட ஆய்வேடு, தமிழ்த்துறை, அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம், அலிகார், உத்திரப்பிரதேசம்.